Written by Administrator
Tuesday, 21 July 2009 09:47 -

□□□□□□□□ **21.07.2009**

ஓகே!

ரூ.40 கோடிக்கு சாக்கடை கால்வாய் கட்ட

கவுன்சில் ஒப்புதலுக்கு, வருகிறது தீர்மானம்

திருப்பூர், ஜூலை 21- திருப்பூர் மாநகராட்சி பகுதியில் புதிதாக வரன் முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகளில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாக்கடை கால் வாய் கட்டும் பணிகள் 10 தொகுப்புகளாக பிரிக்கப்பட் டுள்ளன; அது ஒப்பந்ததாரர் கள் மூலம் மேலைக்கான செய்து, 2010 நடக்கும் காலஅள வு கொண்டு வரப்படுகின்றன.

திருப்பூர் மாநகராட்சி பகுதி களில் புதிதாக வரன்முறைப் படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் வாய்க்கால் சாக்கடை கால்வாய் கட்டும் பணி விரைவில் துவங்கப்பட உள்ளது. தமிழகம் நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனம் மூலம் எல்.எம்.டி.எப். விடம் இருந்து 26 கோடி ரூபாய் கடனாகவும் 10 கோடி ரூபாய் மானியமாகவும் கிடைத்துள்ளது. நேரடியாக நகராட்சி மாநகரில் இருந்து இங்கட்டிக் தொகை பெறப் பட்டுள்ளது. மாநகராட்சி, தனது பங்குத் தொகையாக தான்கு கோடி ரூபாயை இந்திட்டத்துக்காக செல விடுகிறது.

புதிதாக வரன்முறைப்படுத்தப் பட்ட மனைப்பிரிவுகளில், 160 கி.மீ. நீளத்துக்கு சாக்கடை, கால் வாய்கள் கட்டப்பட்ட உள்ளன. 10 தொகுப்புகளாக இப்பணிகள் பிரிக் கப்பட்டு, ஆறு ஒப்பந்தகாரர்களி டம் சாக்கடை கால்வாய் கட்டும் பணிகள் ஒப்படைக்கப்பட உள்ளன. வருமி 2010 நடக்கும் மாபெரு கூட்டத்தில், இப்பணி களுக்கு ஒப் புதல் பெறுவதற்கான தீர்மானங்கள் கொண்டு வரப்பட் டுள்ளன.

ஒரே சமயத்தில் இப்பணிகள் நடைபெற உள்ளதால், பணிகளின் தரத்தை கண்காணிக்கவும், கட்டு மான பொருட்கள் தரமுள்ளதா என்பதையும் அல்லப்பொது பரி சோதனை செய்ய, ஒவ்வொரு 3ய ராக இருந்து கண்காணிக்க கோவை அரசு பொறியியல் கல் லூரியை நியமிக்கவும், மாமன்ற ஒப்புதலுக்கு தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சாக்கடை கால்வாய் கட்டும் பணி 10 தொகுப்புகளாக பிரிக்கப் பட்டுள்ளது: முதல் தொகுப்பின் 2.55 கோடி ரூபாய்; இரண்டாம் தொகுப்பின் 3.44 கோடி; மூன்றாம் தொகுப்பின் நான்கு கோடி; நான்காம் தொகுப்பின் 3.99 கோடி; ஆறாம் தொகுப்பின் 4.30 கோடி; ஏழாம் தொகுப்பின் 1.93 கோடி; எட்டாம் தொகுப்பின் 3.38 கோடி; ஒன்பதாம் தொகுப்பின் 3.84 கோடி; பத்தாம் தொகுப்பின் 4.13 கோடி ரூபாய் என ரூ.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாக்கடை கால்வாய் கட்டும் பணி நடைபெற உள்ளது. 10 மாநகரங்களுக்கும் இப்பணியை முடிக்க வேண்டும். இந்திட்டத்துக்கான கடன் தொகையை, 12 ஆண்டு கால அவகாசத்தில் மாநகராட்சி திரும்ப செலுத்த வேண்டும். அதில், முதல் மூன்றாண்டு காலம் சலுகை காலம்; அதன்பின் ஒன்பது ஆண்டு களில், ஆண்டுக்கு இருமுறை வீதம் 18 அரையாண்டுகளில் கடன் தொகையை திரும்ப செலுத்த வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.